**இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்:- திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப.,**
**ஆணையர்**

**<u>செ.மு.ந.க.எண். 685074/2024-107/பி5, நாள்.19.08.2024</u>**

**பொருள்:** பணிப்பிரிவு – நியமனம் (நேரடி) – தொகுதி-2 பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று – இந்து சமய அறநிலையத்துறைக்கு உதவியாளராக ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் – பணி நியமன ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**பார்வை:** தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடித எண். 1077 PSD-A2/2024, நாள்.04.07.2024

*****

**<u>ஆணை:</u>**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி 2A-ல் அடங்கிய பணிகளுக்கான போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று இந்து சமய அறநிலையத்துறைக்கு ஒதுக்கீடு செய்து தேர்வாணையத்தால் பார்வையில் காணும் குறிப்பின்படி அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள **திருமதி/செல்வி.என்.இராதிகா** என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தமிழ்நாடு திருத்திய ஊதியக் குழு விதிகள் 2017-ன்படி Pay Matrix Level 10 **ரூ.20,600/-**என்ற குறைந்தபட்ச ஊதியத்தில் (உரிய படிகளுடன்) கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி கும்பகோணம் உதவி ஆணையர் அலுவலகத்தில் **உதவியாளராக** தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1) இவர் உதவியாளராக பணியில் சேரும் நாள் முதல் இவருக்கு தகுதிகாண் பருவ காலம் துவங்கும். இவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகள் பணியினை முடிக்க வேண்டும்.

2) இவர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் ஈரோடு மாவட்டம், பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியினை முடிப்பதுடன் பின்வரும் துறைத்தேர்வுகளில் தகுதிப் பெறவேண்டும்.
   (i) Tamil Nadu Government Office Manual Test ;
   (ii) Account Test for Subordinate Officers, Part I;
   (iii) Hindu Religious and Charitable Endowments (Admn) Department Test – First Paper
   (iv) Hindu Religious and Charitable Endowments (Admn) Department Test – Second Paper

   தவறின் இவரது தகுதிகாண் பருவம் முன்னறிவிப்பின்றி முறிவு செய்யப்படும். (Termination of Probation).

3) தமிழ்நாடு பணி நிலைமைச் சட்டம் 2016 விதி 20(5) ன்படிசிவில் சர்ஜன் (Civil Surgeon) நிலைக்கு குறையாத அரசு மருத்துவ அலுவலரிடமிருந்து உரிய படிவத்தில் உடற்தகுதி சான்று பெற்று பணியில் சேரும்போது பணி ஏற்பு அறிக்கையுடன் அளிக்க வேண்டும்.

Scanned with OKEN Scanner

4) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள நபரின் கல்வி மற்றும் இதரத் தகுதிச் சான்றிதழ்கள், அவர் அளித்துள்ள விவரங்கள் மற்றும் ஆவணங்கள் போலியானவை என பின்னர் கண்டறியப்பட்டால் உடன் பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவதுடன், குற்றவியல் நடவடிக்கைக்கு ஆளாக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5) பணி நியமனம் ஆணை வழங்கப்பட்டுள்ள நபர் ஆணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் பணிநியமனம் செய்யப்பட்ட அலுவலகத்தில் பணியில் தவறாமல் சேர அறிவுறுத்தப்படுகிறது. தவறின் அன்னாரின் பெயரினை தேர்வாணையப் பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

6) பணியில் சேர கால அவகாசம் கோரி பெறப்படும் விண்ணப்பம் பரிசீலிக்கப்படமாட்டாது.

7) இந்நியமனத்தில் நியமன ஒதுக்கீடு விதி பின்பற்றப்பட்டுள்ளது.

8) இவருக்கு உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்துவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள W.A (MD).No.181/2023 & C.M.P. (MD).No.2247/2023 மற்றும் உயர்நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பிற்கு உட்பட்டு பரிசீலிக்கப்படும்.

9) இவர் பணியில் சேர்ந்தவுடன் அருகிலுள்ள திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளின்படி இந்து மதத்தை பின்பற்றுகிறார் என்பதற்கான உறுதிமொழியினை உரிய படிவத்தில் எடுத்து, அதனை அன்னாரது பணிப்பதிவேட்டில் பதியவேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/-பி.என்.ஸ்ரீதர்
ஆணையர்

/உண்மைநகல்/உத்தரவுப்படி/

19/8/24
கண்காணிப்பாளர்
19/08/2024

<u>பெறுநர்</u>

1) திருமதி/செல்வி.என்.இராதிகா
எண்.47, கீழத்தெரு, கச்சுக்கட்டு, மல்லபுரம் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் – 612 201.

<u>நகல்</u>

2) உதவி ஆணையர் , இந்து சமய அறநிலையத்துறை, கும்பகோணம்.
3) தொடர்புடைய கருவூல அலுவலர், சார்நிலை அலுவலர்கள் மூலமாக.
4) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் சாலை, சென்னை–600 003.
5) மிகை.

Scanned with OKEN Scanner